# ஆசிரியர் கையேடு 2014

# பகுதி I

## முதல் வகுப்பு

1. Greetings and Self-Introduction - **வாழ்த்துக்களும் தன்னையே அறிமுகப்படுத்துதலும்**

**திறன்கள்**: கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்**: வணக்கம்

**நோக்கம்**: ஒருவரைச் சந்திக்கும்போது மதிப்பு காட்டும்படி வணக்கம் சொல்லும் பழக்கத்தை வளர்த்தல்

**துணைக்கருவி**: மாணவன் ஆசிரியருக்கு வணக்கம் சொல்லும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் மாணவர்களுக்கு 'வணக்கம்' சொல்லுதல்.

உ. மாணவர்கள் 'வணக்கம்' என்று விடை அளித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொற்கள்:** பெயர் / என் / உன்

**நோக்கங்கள்**:
- தன் பெயரைச் சொல்லுதல்
- 'என்' மற்றும் 'உன்' ஆகியவற்றின் வேறுபாட்டை அறிதல்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் சுட்டிக்காட்டி, 'உன் பெயர் வாணி; உன் பெயர் அமலன்,.........'என்று சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனும் தன்னையே சுட்டிக்காட்டி, 'என் பெயர் ........' என்று கூறுதல்.

ஊ. ஆசிரியர் ஒவ்வொருவரையும் பார்த்து, 'உன் பெயர் என்ன?' என்று வினவி விடை வரவழைத்தல்.

************

2. Classroom environment - வகுப்புச் சூழல்

**திறன்கள்**: கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொற்கள்**: ஆசிரியர் (ஐயா) / ஆசிரியை

**நோக்கம்**: 'ஆசிரியர்' (ஐயா) மற்றும் 'ஆசிரியை' ஆகிய சொற்களை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்**:ஆசிரியர் (ஐயா) / ஆசிரியை படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் (ஐயா) / ஆசிரியை தம்மையே சுட்டிக்காட்டி, 'நான் ஆசிரியர் (ஐயா) / ஆசிரியை' என்று கூறுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் 'வணக்கம் ஐயா / ஆசிரியை' என்று சொல்ல வைத்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொற்கள்**: சிறுவன் / சிறுமி

**நோக்கம்**: சிறுவன் மற்றும் சிறுமி ஆகியோரை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்**: சிறுவன் / சிறுமி படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பில் உள்ள ஒரு சிறுவனைச் சுட்டிக்காட்டி, 'சிறுவன்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒரு சிறுவனைச் சுட்டிக்காட்டி, 'தேவன் (ஒரு) சிறுவன்' என்று சொல்லுதல்.

**குறிப்பு**: 'சிறுவன்' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'சிறுமி' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொற்கள்**: இவன், இவள், இவர்

**நோக்கம்**: - 'இவன், இவள், இவர்' ஆகிய சொற்களைப் பயன்படுத்தும் இடத்தை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்**: பொருத்தமான கருவிகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒரு மாணவனைச் சுட்டிக்காட்டி, 'இவன் சிறுவன். இவன் பெயர் ............', என்று கூறுதல்.

உ. ஆசிரியர் ஒரு மாணவியைச் சுட்டிக்காட்டி, 'இவள் சிறுமி. இவள் பெயர் ............', என்று கூறுதல்.

ங. ஆசிரியர் ஒரு மாணவனை அழைத்து அவ்வாறே செய்யச் சொல்லுதல்.

ச. ஆசிரியர், ஓர் ஆசிரியர் / ஆசிரியை படத்தைச் சுட்டிக்காட்டி, 'இவர் ஆசிரியர் (ஐயா) / ஆசிரியை' என்று கூறுதல்.

ரு. ஒவ்வொரு மாணவனும் அவ்வாறே செய்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** உட்கார்

**நோக்கம்:** 'உட்கார்' என்ற செயலை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி:** பொருத்தமான படம்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு நாற்காலியில் உட்காரும்பொழுது, 'நான் உட்காருகிறேன்' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** நில்

**நோக்கம்:** 'நில்' என்ற செயலை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி:** பொருத்தமான படம்

**நடவடிக்கைகள்:**

க. உட்கார்ந்து கொண்டிருந்த ஆசிரியர் எழுந்து 'நான் நிற்கிறேன்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** வா

**நோக்கம்:** 'வா' என்ற செயலை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி:** பொருத்தமான படம்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் வகுப்பில் நுழையும்போது, 'நான் வருகிறேன்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒரு மாணவனைக் கூப்பிட்டு, மாணவன் ஆசிரியரை நோக்கி வரும்பொழுது, 'நான் வருகிறேன்' என்று சொல்ல வைத்தல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் இவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

***********

**கற்பித்தல், கற்றல் சொல்**: போ

**நோக்கம்:** 'போ'என்ற செயலை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி**: பொருத்தமான படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பை விட்டு வெளியே போகும்பொழுது, 'நான் போகிறேன்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

************

## 3. Good Manners - **நல்லொழுக்கங்கள்**

நல்லொழுக்கங்களை ஒட்டி வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்

**நோக்கம்:** மாணவனுக்கு 'நன்றி', 'உத்தரவு கொடு' ஆகிய நல்லொழுக்கங்களைப் புகட்டுதல்.

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு மாணவனுக்கு ஒரு மிட்டாய் கொடுத்து, 'நன்றி ஐயா' என்று சொல்ல வைத்தல். இப்படி எல்லா மாணவர்களையும் சொல்லவும் செய்யவும் வைத்தல்.

உ. 'நன்றி' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ங. ஆசிரியர் 'உத்தரவு கொடு' என்ற சொல்லைக் கற்பிக்கும் முன் விளக்கம் தர வேண்டும். வகுப்புக்குள் இருக்கின்ற ஒரு மாணவன் வெளியே போக விரும்பினால் அவன் 'ஐயா / ஆசிரியை உத்தரவு கொடுங்கள்' என்று சொல்ல வைத்தல்.

4. Objects in classroom - **வகுப்பில் உள்ள பொருள்கள்**

வகுப்பிலுள்ள பொருள்களை ஒட்டி வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்

**நோக்கங்கள்:** மாணவனுக்குத் தெரிந்துகொள்ள வேண்டுவன:

க. வகுப்பிலுள்ள பொருள்கள்

உ. மேசை, நாற்காலி, பை, எழுதுகோல், நூல் ஆகிய சொற்களை எளிய சொற்றொடர்களில் பயன்படுத்துதல்

**துணைக்கருவிகள்:** பொருத்தமான படங்கள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு மேசையைச் சுட்டிக்காட்டி, 'மேசை', 'இது மேசை' என்று சொல்லுதல்.

உ. ஆசிரியர் இவ்வாறே பல முறை திருப்பிச் சொல்லுதல். மாணவர்கள் உற்றுக் கேட்டல்.

ங. மாணவர்கள் ஒரு மேசையைச் சுட்டிக்காட்டி, 'மேசை', 'இது மேசை' என்று சொல்லுதல்.

ச. அவ்வாறே ஆசிரியர் 'நாற்காலி' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ரு. மாணவர்கள் ஒரு நாற்காலியைச் சுட்டிக்காட்டி, ' நாற்காலி', 'இது நாற்காலி' என்று சொல்லுதல்.

சூ. மேசை, நாற்காலி ஆகிய சொற்களை நன்கு உணரும் வரை மாணவர்கள் திருப்பித் திருப்பிச் சொல்லுதல்.

எ. ஒவ்வொரு மாணவனும் அந்தப் பொருள்களின் பெயர்களைச் சரியான உச்சரிப்புடன் சொல்ல வைத்தல்.

அ. கீழ்க்கண்டவாறே எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது மேசை.
இது என் / உன் மேசை.
இது ஐயா / ஆசிரியை மேசை.
இது ஈசன் மேசை.

**குறிப்பு:** 'மேசை, நாற்காலி' ஆகிய சொற்களைக் கற்பித்தவாறே பை, எழுதுகோல், நூல் ஆகிய சொற்களையும் கற்பித்தல்.

************

5. Follow instructions - **கட்டளைகளைப் பின்பற்றுதல்**

'கட்டளைகளைப் பின்பற்றுதல்' என்ற தலைப்பை ஒட்டி வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்

**நோக்கங்கள்:** மாணவனுக்குத் தெரிந்துகொள்ள வேண்டுவன:

க. கட்டளைகளைப் புரிந்துகொள்ளுதல்

உ. கட்டளைகளைப் பின்பற்றுதல்

ங. அவற்றை ஒட்டிச் சில எளிய சொற்றொடர்களைச் சொல்லுதல்

**நடவடிக்கைகள்:**

க. 'நூல் படி', 'எழுது', 'கதவு திற', "கதவு மூடு' ஆகிய ஒவ்வொரு கட்டளையும் ஆசிரியர் சொல்லுதல்.

உ. மாணவன், 'நான் நூல் படிக்கிறேன்', 'நான் எழுதுகிறேன்', 'நான் கதவு திறக்கிறேன்', 'நான் கதவு மூடுகிறேன்' என்று சொல்லுதல்.

************

**6. Outside the classroom - வகுப்பறைக்கு வெளியே**

**கற்பித்தல், கற்றல் சொல்:** பூ

**நோக்கம்:** 'பூ' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி:** உண்மையான பூக்கள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் மாணவர்களை வெளியே அழைத்துப் போதல். அவர் மாணவர்களுக்குப் பூந்தொட்டிகளில் / தோட்டத்தில் உள்ள பூவைச் சுட்டிக்காட்டி, 'இது பூ' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. பிறகு ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'பூ' என்ற சொல்லைக் கொண்டு எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** பழம்

**நோக்கம்:** 'பழம்' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி:** உண்மையான பழங்கள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஏதாவது ஒரு பழத்தைச் சுட்டிக்காட்டி, 'இது பழம்' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. ஆசிரியர் 'ஆப்பிள் ஒரு பழம், வாழை ஒரு பழம்....................'என்று அந்தந்தப் பழத்தின் படத்தைச் சுட்டிக்காட்டிச் சொல்லுதல்.

************

**7. Count from one to five - ஒன்று முதல் ஐந்து வரை எண்ணுதல்**

**நோக்கங்கள்:** மாணவனுக்குத் தெரிந்துகொள்ள வேண்டுவன:

க. எண்ணை வரிசைப்படுத்திக் கூறுதல்

உ. எண்களை அறிமுகம் செய்தல்

ங. ஒன்று முதல் ஐந்து வரை எண்ண அறிந்து கொள்ளுதல்

**துணைக்கருவிகள்:** - எண் அட்டைகள் ஒன்று - (க) முதல்

ஐந்து - (ரு) வரை

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் செய்கை மூலம் எண்களை விளக்குதல்.

உ. ஆசிரியர் மேசைமேல் பொருளை ஒன்று ஒன்றாக வைத்துக் கொண்டு 'ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து' என்று எண்ணிக் கொண்டே கூறுதல்.

ங. 'ஒன்று, இரண்டு. மூன்று, நான்கு, ஐந்து' ஆகிய எண்களைப் பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

ச. ஒவ்வொரு மாணவனும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

************

# ஆசிரியர் கையேடு 2015

# பகுதி II

## முதல் வகுப்பு

### தொகுதி ஒன்று

க. வணக்கம்

உ. ஆசிரியர்/ஐயா

ங. ஆசிரியை

ச. நான்

ரு. நீ

சூ. சிறுவன்

எ. சிறுமி

அ. இவன்

கூ. இவள்

க0. உட்கார்

கக. நில்

**திறன்கள்:** கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்**: வணக்கம்

**நோக்கம்:** ஒருவரைச் சந்திக்கும்போது மதிப்பு காட்டும்படி வணக்கம் சொல்லும் பழக்கத்தை வளர்த்தல்

**துணைக்கருவிகள்**:
- சிறுமி வணக்கம் சொல்லும் படம்
- 'வணக்கம்' என்ற செய்கையைக் குறிப்பிடும் மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் நின்று கைகளைக் கூப்பி மாணவர்களைப் பார்த்து, 'வணக்கம்' என்று பல முறை சொல்லுதல்.

உ. எல்லா மாணவர்களும் ஆசிரியர் செய்தவாறே நின்று 'வணக்கம்' என்று நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் பார்த்து, 'வணக்கம்............' என்று மாணவனுடைய பெயரைச் சொல்லி, அதற்குப் பதிலாக மாணவன் 'வணக்கம் ஐயா /ஆசிரியை' என்று சொல்ல வைத்தல்.

ச. ஆசிரியர் மாணவர் இருவரை வகுப்புக்கு முன்னால் நிற்க வைத்து ஒருவர் ஒருவருக்கு வணக்கம் சொல்ல வைத்தல்.

ரு. இவ்வாறே ஆசிரியர் மாணவர்களுடைய நண்பர்களுக்கு வணக்கம் சொல்லும் தொடர்களைக் கற்பித்தல்.

**(எ-கா)** 'வணக்கம் அரசி'

'வணக்கம் குமரன்'

************

**கற்பித்தல்,கற்றல் சொல்:** ஆசிரியர்/ஐயா

**நோக்கம்:** ஆசிரியர்/ஐயா , ஆசிரியை ஆகிய சொற்களை அடையாளம் காணுதல்

**துணைக்கருவிகள்**: - ஆசிரியர் படம் (வகுப்புச் சூழல்) /தாமே
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் நின்று 'ஆசிரியர்' படத்தைச் சுட்டிக்காட்டி, 'ஆசிரியர்' என்று பல முறை சொல்லுதல்.

உ. மாணவர்கள் எல்லாரையும் 'ஆசிரியர்/ஐயா' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கச் செய்தல்.

ங. ஆசிரியர் தம்மைச் சுட்டிக்காட்டி, 'நான் 'ஆசிரியர் / ஐயா' என்று பல முறை சொல்லுதல்.

ச. ஆசிரியர் தம்மைச் சுட்டிக்காட்டி, ஒவ்வொரு மாணவனையும் 'ஆசிரியர்' என்று உச்சரித்துச் சொல்ல வைத்தல்.

ரு. 'ஆசிரியர்' என்ற சொல்லைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இவர் யார்?
உன் ஆசிரியர் பெயர் என்ன?

**குறிப்பு**: 'ஆசிரியர்' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'ஆசிரியை' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: நான்

**நோக்கம்:** 'நான்' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி**: ஒருவர் தம்மைச் சுட்டிக்காட்டும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் நின்று மாணவர்களைப் பார்த்து, தம்மைச் சுட்டிக்காட்டி 'நான்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனும் தன்னையே சுட்டிக்காட்டி 'நான்' என்று சொல்ல வைத்தல்.

ங. ஆசிரியர் தம்மைச் சுட்டிக்காட்டி 'நான் ஐயா /ஆசிரியை' என்று பல முறை சொல்லுதல்.
*['நான்' என்ற சொல்மீது அழுத்தம் போடுதல்]*

ச. ஒவ்வொரு மாணவனும் 'நான் ...........' என்று சொல்லுதல். *(பெயரைக் குறிப்பிடுதல்)*

ரு. 'யார்' என்ற சொல்லைக் கொண்டு ஆசிரியர் எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்தலாம்.

**(எ-கா)** *நீ யார்? என்று வினவி 'நான்............' என்ற விடை வரவழைத்தல்.*

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: நீ

**நோக்கம்:** 'நீ' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி**: ஒரு சிறுவன் இன்னொரு சிறுவனை நோக்கிச் சுட்டிக்காட்டும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் தம்மைச் சுட்டிக்காட்டி 'நான்' என்று சொல்லி, ஒரு மாணவனை நோக்கி அவனைச் சுட்டிக்காட்டி 'நீ' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒரு மாணவனை வகுப்புக்கு முன்னால் அழைத்து அவனைப் பார்த்து, அவனைச் சுட்டிக்காட்டி, 'நீ ...........'என்று சொல்லுதல். *[பெயரைச் சொல்லுதல்]*

ங. ஆசிரியர் இவ்வாறே ஒவ்வொரு மாணவனையும் நிற்கச் செய்து, தன் நண்பனைச் சுட்டிக்காட்டி 'நீ ............' என்று சொல்ல வைத்தல்.

ச. ஒவ்வொருவரும் 'நான்.............', 'நீ ...............' என்று சொல்லச் செய்தல். *[பெயரைச் சொல்லுதல்]*

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: சிறுவன்

**நோக்கம்**: 'சிறுவன்' மற்றும் 'சிறுமி' ஆகியோரை அடையாளம் காணுதல்

**துணைக்கருவிகள்**:
- சிறுவர்களும் சிறுமிகளும் சேர்ந்த படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பில் உள்ள ஒரு சிறுவனைச் சுட்டிக்காட்டி, 'சிறுவன்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஆசிரியர் தம்மைச் சுட்டிக்காட்டி 'நான் ஆசிரியர்/ஐயா', பிறகு சிறுவனைச் சுட்டிக்காட்டி 'நீ சிறுவன்' என்று பல முறை சொல்லுதல்.

ங. ஆசிரியர் ஒரு சிறுவனை வகுப்புக்கு முன்னால் நிற்கச் செய்து, சிறுவன் தன்னைச் சுட்டிக்காட்டி 'நான் சிறுவன்' என்று பல முறை சொல்ல வைத்தல்.

ச. ஒவ்வொரு மாணவனையும் இவ்வாறே சொல்ல வைத்தல்.

ரு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இவன் சிறுவன்.

இவன் பெயர் அகிலன்.

**குறிப்பு:** 'சிறுவன்' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'சிறுமி' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: இவன்

**நோக்கம்:** 'இவன், இவள்' ஆகிய சொற்களை அடையாளம் காணுதல்

**துணைக்கருவி**: ஆசிரியர் ஒரு சிறுவனைச் சுட்டிக்காட்டும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பு மாணவர்களை நோக்கி, ஒரு மாணவனைச் சுட்டிக்காட்டி 'இவன்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒரு மாணவனைச் சுட்டிக்காட்டி 'இவன் சிறுவன்' என்று சொல்லுதல்.

ங. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் தன் நண்பனைச் சுட்டிக் காட்டி 'இவன் ...........' என்று சொல்ல வைத்தல். *(பெயரைக் குறிப்பிடுதல்)*

ச.	'இவன்' என்ற சொல்லைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)**	இவன் யார்?
இவன் சிறுவன்.
இவன் கண்ணன்.

**குறிப்பு**: 'இவன்' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'இவள்' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: உட்கார்

**நோக்கம்:** 'உட்கார்' என்ற செயலை அடையாளம் காணுதல்

**துணைக்கருவி**: ஒருவன் நாற்காலியில் உட்காரும் படம்

**நடவடிக்கைகள்**:

க.	ஆசிரியர் ஒரு நாற்காலியில் உட்காரும்பொழுது, 'நான் உட்காருகிறேன்' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ.	ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ந.	'உட்கார்' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: நில்

**நோக்கம்:** 'நில்' என்ற செயலை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி**: ஒருவன் நிற்கும் படம்

**நடவடிக்கைகள்**:

க. உட்கார்ந்து கொண்டிருந்த ஓர் ஆசிரியர் எழுந்து , 'நான் நிற்கிறேன்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'நில்' என்ற சொல்லை வைத்து வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

## பாடல் க

## காலை வணக்கம்

அம்மா வுக்கு வணக்கம்;
அப்பா வுக்கு வணக்கம்!

அண்ணா வுக்கு வணக்கம்;
அக்கா ளுக்கு வணக்கம்!

தாத்தா, பாட்டி இருவருக்கும்
தங்கப் பாப்பா வணக்கம்!

சின்னப் பாப்பா எல்லாருக்கும்
சொல்லும் காலை வணக்கம்!

************

# தொகுதி இரண்டு

க. அம்மா

உ. அப்பா

௩. இவர்

௪. என்

௫. உன்

௬. நன்றி

௭. வா

௮. போ

**திறன்கள்**: கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்**: அம்மா

**நோக்கம்:** 'அம்மா' என்ற சொல்லை அறிமுகப்படுத்துதல்

**துணைக்கருவிகள்**: - அம்மா படம் (குடும்பப் படம் அம்மா கையில் குழந்தை)

- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் படத்திலுள்ள அம்மாவைச் சுட்டிக்காட்டி 'அம்மா' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் மாணவர்கள் எல்லாரையும் 'அம்மா' என்ற சொல்லைப் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்ல வைத்தல்.

ங. ஒவ்வொரு மாணவனும் (அம்மா படத்தைச் சுட்டிக்காட்டி) 'அம்மா' என்று சொல்லுதல்.

ச. 'அம்மா' என்ற சொல்லை வைத்து எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இவர் யார்?
இவர் அம்மா.
என் அம்மா பெயர் ............
என் அம்மா அன்பானவர்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: அப்பா

**நோக்கம்:** 'அப்பா' என்ற சொல்லை அறிமுகப்படுத்துதல்

**துணைக்கருவிகள்**: - அப்பா படம் (குடும்பப் படம்)

- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் நின்று அப்பா படத்தைச் சுட்டிக்காட்டி 'அப்பா' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் மாணவர்கள் எல்லாரையும் 'அப்பா' என்ற சொல்லை நன்கு உச்சரித்துச் சொல்ல வைத்தல்.

ங. ஒவ்வொரு மாணவனும் அப்பா படத்தைச் சுட்டிக்காட்டி 'அப்பா' என்று சொல்லுதல்.

ச. 'அப்பா' என்ற சொல்லைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** ஆசிரியர் மாணவர்களுக்கு 'அப்பா' படத்தைக் காட்டி,

இவர் யார்?

இவர் அப்பா.

என் அப்பா பெயர் ............

என் அப்பா நல்லவர்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: இவர்

**நோக்கம்:** 'இவர்' என்ற சொல்லை அடையாளம் காணுதல்

**துணைக்கருவி**: சிறுவன் ஆசிரியரை அல்லது ஒரு பெரியவரைச் சுட்டிக்காட்டும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் படத்தைக் காட்டி, 'இவர்' என்று பல முறை சொல்லுதல்.

உ. படத்தைக் காட்டி 'இவர் அம்மா' என்று பல முறை சொல்லுதல்.

ங. இப்படிப் பல படங்களைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இவர் அம்மா /அப்பா.
இவர் ஆசிரியர் / ஆசிரியை.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: என்

**நோக்கம்:** 'என்' என்ற சொல்லை அடையாளம் காணுதல்

**துணைக்கருவிகள்**: பொருத்தமான கருவிகள்

**நடவடிக்கைகள்**:

க. மாணவன்/மாணவி தன்னைச் சுட்டிக்காட்டி 'என் பெயர்...........' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனும் 'என் அம்மா/அப்பா பெயர்' என்று சொல்லுதல். *(பெயரைக் குறிப்பிடுதல்)*

ங. 'என்' என்ற சொல்லைக் கொண்டு எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இவர் என் ஆசிரியர்/ஆசிரியை.
என் ஆசிரியர்/ஆசிரியை பெயர் ............
இவர் என் அம்மா/அப்பா.
என் அம்மா/அப்பா பெயர் ............
என் பெயர்............

************

**கற்பித்தல் கற்றல் சொல்**: உன்

**நோக்கம்:** 'உன்' என்ற சொல்லை அடையாளம் காணுதல்

**துணைக்கருவிகள்**: பொருத்தமான கருவிகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒரு மாணவனுக்குப் பக்கத்தில் நின்று அவனைச் சுட்டிக்காட்டி, 'உன் பெயர் ............' என்று சொல்லுதல்.

*'உன்' என்ற சொல்மீது அழுத்தம் போடுதல்.* இப்படி எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** உன் ஆசிரியர் / ஆசிரியை பெயர் ............

உ. 'என்/உன்' ஆகிய சொற்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ங. ஒவ்வொரு மாணவனிடமும் 'உன் பெயர் என்ன?, உன் ஆசிரியர் / ஆசிரியை பெயர் என்ன?' போன்ற வினாக்களைக் கேட்டு விடைகளை வரவழைத்தல்.

************

**கற்பித்தல் கற்றல் சொல்**: நன்றி

**நோக்கம்:** 'நன்றி' என்ற நல்லொழுக்கத்தைப் புகட்டுதல்.

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் மாணவனுக்கு ஒரு பொருளைக் கொடுத்து 'நன்றி ஐயா' என்று சொல்ல வைத்தல்.

உ. இவ்வாறே ஆசிரியர் மாணவர்கள் சிலருக்கு ஒரு பொருளைக் கொடுத்து 'நன்றி ஐயா' என்று சொல்ல வைத்தல்.
*'நன்றி' என்ற சொல்மீது அழுத்தம் போடுதல்.*

௩. மாணவன் ஆசிரியருக்கு ஒரு பொருளைக் கொடுத்து, ஆசிரியர் 'நன்றி ...........' என்று சொல்லுதல்.
*(பெயரைக் குறிப்பிடுதல்)*

௪. 'நன்றி' என்ற சொல்லை வைத்து எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

௫. இவ்வாறே ஆசிரியர் மாணவர்கள் தங்கள் நண்பர்களுக்கு நன்றி சொல்லும் தொடர்களைக் கற்பித்தல்.

**(எ-கா)** நன்றி அரசி
நன்றி குமரன்

************

**கற்பித்தல் கற்றல் சொல்**: வா

**நோக்கம்:** 'வா' என்ற செயலை அடையாளம் காணுதல்

**துணைக்கருவி**: பொருத்தமான படம்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் வகுப்பில் நுழையும்போது, 'நான் வருகிறேன்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒரு மாணவனைக் கூப்பிட்டு, மாணவன் ஆசிரியரை நோக்கி வரும்பொழுது, 'நான் வருகிறேன்' என்று சொல்ல வைத்தல்.

௩. ஒவ்வொரு மாணவனையும் இவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

௪. 'இங்கே வா' என்ற தொடரைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

௫. 'அம்மா இங்கே வா வா' என்ற பாடலைப் பாடுதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: போ

**நோக்கம்:** 'போ' என்ற செயலை அடையாளம் காணுதல்

**துணைக்கருவி**: பொருத்தமான படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பை விட்டு வெளியே போகும்பொழுது, 'நான் போகிறேன்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'அங்கே போ' என்ற தொடரைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. ஒரு மாணவன் இன்னொரு மாணவனைப் பார்த்து, 'அங்கே போ' என்று கட்டளை இடுதல்; அடுத்தவன் போகும்பொழுது, 'நான் அங்கே போகிறேன்' என்று சொல்லுதல்.

ரு. ஆசிரியர் மாணவர்கள் எல்லாரையும் இவ்வாறே சொல்ல வைத்தல்.

************

**பாடல் உ**

அம்மா இங்கே வா வா

ஆசை முத்தம் தா தா

இலையில் சோறு போட்டு

ஈயைத் தூர ஓட்டு

# தொகுதி மூன்று

க. மேசை

உ. நாற்காலி

ங. அலமாரி

ச. குவளை

ரு. பை

சு. பால்

எ. குடி

அ. தண்ணீர்

கூ. மேல்

க0. கீழ்

கக. எடு

கஉ. வை

கங. பந்து

**திறன்கள்**: கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்**: மேசை

**நோக்கம்:** 'மேசை, நாற்காலி' ஆகிய சொற்களை அடையாளம் காணுதல்

**துணைக்கருவிகள்**:
- மேசை (உண்மையான பொருள்)
- மேசை படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் நின்று ஒரு மேசையைச் சுட்டிக்காட்டி, 'மேசை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் இவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'மேசை' என்ற சொல்லைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது யார் மேசை?
இது என் மேசை.
அது உன் மேசை.
இது ஆசிரியர்/ஐயா மேசை.

ச. கீழ்க்காணும் மேசை பற்றிய பாடலைப் பாடச் செய்க.

**பாடல் ங**

வரிசை வரிசையாக மேசையாம்
அசையா திருக்கும் மேசையாம்
மேசை மேலே தோசையாம்
எடுத்துப் போடு காசையாம்

**குறிப்பு:** 'மேசை' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'நாற்காலி' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** அலமாரி

**நோக்கம்:** 'அலமாரி' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:**
- அலமாரி (உண்மையான பொருள்)
- அலமாரி படம்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் அலமாரியின் படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது அலமாரி' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் வகுப்பில் உள்ள அலமாரிக்குப் பக்கத்தில் நின்று, அதைத் தொட்டு, 'இது அலமாரி' என்று சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் தொலைவில் இருக்கின்ற அலமாரியைச் சுட்டிக்காட்டி 'அது அலமாரி' என்று உச்சரித்துச் சொல்லுதல்.

ச. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ரு. 'அலமாரி' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது யார் அலமாரி?
அலமாரியில் என்ன இருக்கிறது?

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** குவளை

**நோக்கம்:** 'குவளை' என்ற சொல்லை அறிமுகப்படுத்துதல்

**துணைக்கருவிகள்**: - குவளை (உண்மையான பொருள்)

- குவளை படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒரு குவளையைக் சுட்டிக்காட்டி, 'இது குவளை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'குவளை' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது என்ன?
இது குவளை.
இது யார் குவளை?
இது என் குவளை / இது சிறுவன் குவளை.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: பை

**நோக்கம்:** 'பை' என்ற சொல்லை அடையாளம் காணுதல்

**துணைக்கருவிகள்:** - பை (உண்மையான பொருள்)

- பை படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒரு பையைச் சுட்டிக்காட்டி 'இது பை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் இவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'இது யார் பை? என்று ஒவ்வொரு மாணவனிடமும் கேட்டு, விடையை வரவழைத்தல்.

ச. 'பை' என்ற சொல்லைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது யார் பை?

இது அரசி பை.

இது அமலன் பை.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: பால்

**நோக்கம்:** 'பால்' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி**: பால் (உண்மையான பொருள்)

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒரு கண்ணாடிக் குவளையில் பாலை ஊற்றி அந்தப் பாலைச் சுட்டிகாட்டி, 'இது பால்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் பாலைச் சுட்டிக்காட்டி, 'இது பால்' என்று சொல்ல வைத்தல்.

ங. 'பால்' என்ற சொல்லை வைத்து எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** குவளையில் என்ன இருக்கிறது?

குவளையில் பால் இருக்கிறது?

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: குடி

**நோக்கம்**: 'குடி' என்ற செயலை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி**: ஒருவர் பால் குடிக்கும் படம்

**நோக்கம்**: 'குடி' என்ற செயலை அறிமுகம் செய்தல்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் பால் குடிக்கும் செயலைக் காட்டி, 'நான் பால் குடிக்கிறேன்' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'குடி' என்ற சொல்லை வைத்து வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: தண்ணீர்

**நோக்கம்**: 'தண்ணீர்' என்ற சொல்லை அறிமுகப்படுத்துதல்

**துணைக்கருவிகள்**: - தண்ணீர் (உண்மையான பொருள்)

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒரு புட்டியில் உள்ள தண்ணீரைச் சுட்டிக்காட்டி 'இது தண்ணீர்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் 'தண்ணீர்' என்ற சொல்லைப் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. மாணவர் ஒவ்வொருவரையும் அவ்வாறே சொல்ல வைத்தல்.

ச. 'தண்ணீர்' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** தண்ணீர் குடி.

நான் தண்ணீர் குடிக்கிறேன்.

குவளையில் தண்ணீர் இருக்கிறது.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: மேல்

**நோக்கம்**: 'மேல்' என்ற சொல்லை அறிந்துகொள்ளுதல்

**துணைக்கருவி**: மேசைமேல் பை (உண்மையான பொருள்)

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் மேசைமேல் உள்ள பையைச் சுட்டிக்காட்டி, 'பை மேசை மேல் இருக்கிறது' என்று பல முறை சொல்லுதல்.

உ. இவ்வாறே ஒவ்வொரு மாணவனையும் செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'மேல்' என்ற சொல்லைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** பை நாற்காலிமேல் இருக்கிறது.

குவளை அலமாரிமேல் இருக்கிறது.

பூ மேசைமேல் இருக்கிறது.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: கீழ்

**நோக்கம்**: 'கீழ்' என்ற சொல்லை அறிந்துகொள்ளுதல்

**துணைக்கருவி**: மேசைக்கீழ் பை (உண்மையான பொருள்கள்)

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் மேசைக்கீழ் உள்ள பையைச் சுட்டிக்காட்டி, 'பை மேசைக் கீழ் இருக்கிறது' என்று பல முறை சொல்லுதல்.

உ. இவ்வாறே ஒவ்வொரு மாணவனையும் செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'மேல், கீழ்' என்ற வேறுபாட்டைக் காட்டும்வகையில் வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** பை எங்கே இருக்கிறது?
குவளை எங்கே இருக்கிறது?

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: எடு

**நோக்கம்:** 'எடு' என்ற கட்டளையைப் பின்பற்றுதல்

**துணைக்கருவி**: சிறுவன் பையிலிருந்து நூலை எடுக்கும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் பையிலிருந்து நூலை எடுக்கும் பொழுது மாணவர்களைப் பார்த்து 'நான் நூல் எடுக்கிறேன்' என்று பல முறை சொல்லுதல்

உ. 'எடு' என்ற சொல்லை மாணவர்கள் எல்லாரையும் உச்சரிக்கச் செய்தல்.

ங. மாணவர் ஒவ்வொருவரையும் பையிலிருந்து நூலை எடுக்கும் பொழுது 'நான் நூல் எடுக்கிறேன்' என்று சொல்ல வைத்தல்.

ச. 'எடு' என்ற சொல்லோடு 'பை', 'குவளை' முதலிய சொற்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** நான் பை எடுக்கிறேன்.
நான் குவளை எடுக்கிறேன்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: வை

**நோக்கம்:** 'வை' என்ற கட்டளையைப் பின்பற்றுதல்.

**துணைக்கருவி**: சிறுமி மேசைமேல் பையை வைக்கும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பு முன்னால் மேசைமேல் பை வைக்கும்பொழுது மாணவர்களைப் பார்த்து 'நான் பை வைக்கிறேன்' என்று பல முறை சொல்லுதல்

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் மேசைமேல் பையை வைக்கும்படி கட்டளை இட்டு, ஒவ்வொருவனும் பையை வைத்துக் கொண்டே 'நான் பை வைக்கிறேன்' என்று செய்கையுடன் சொல்லுதல்

ங. ஆசிரியர் 'பை' என்ற சொல்லுக்குப் பதிலாக, 'குவளை' , 'பூ' முதலிய சொற்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** நான் பை வைக்கிறேன்.
நான் மேசைமேல் குவளை வைக்கிறேன்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: பந்து

**நோக்கம்:** 'பந்து' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்**: - பந்து (உண்மையான பொருள்)
- பந்து படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் நின்று பந்தைச் சுட்டிக்காட்டி,

'இது பந்து' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் ‘பந்து’ என்ற சொல்லை நன்கு உச்சரிக்கச் செய்தல்.

ஊ. ‘பந்து காட்டு, பந்து எடு, பந்து பிடி, பந்து மேசைமேல் வை’ போன்ற ஏவல் தொடர்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

எ. ‘பந்து’ என்ற சொல்லைக் கொண்டு எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது யார் பந்து?
மேசைமேல் என்ன இருக்கிறது?
பந்து எங்கே இருக்கிறது? (நாற்காலிக் கீழ்)
பந்து அலமாரிமேல் வை.

************

# தொகுதி நான்கு

க. பள்ளி

உ. வகுப்பறை

ஙு. கரும்பலகை

ச. வெண்பலகை

ரு. சுண்ணாம்புக்கட்டி

சூ. நூல்

எ. படி

அ. எழுது

கூ. பெரிய

க0. சிறிய

கக. பெட்டி

**திறன்கள்**: கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்**: பள்ளி

**நோக்கம்:** 'பள்ளி' என்ற சொல்லை அறிதல்

**துணைக்கருவிகள்**: - பள்ளி

- பள்ளி படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் பள்ளிப் படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது பள்ளி' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் அனைவரும் 'பள்ளி' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கும்படி செய்தல்.

ங. 'பள்ளி' என்ற சொல்லோடு 'என்', 'உன்' போன்ற சொற்களை இணைத்துக் கற்பித்தல். பள்ளிப் பெயரையும் சேர்த்துக் கற்பித்தல்.

ச. பள்ளிப் படத்தைக் கொண்டு பல முறை உரையாடல் நடத்துதல்.

**(எ-கா)** இது எந்தப் படம்?
இது பள்ளிப் படம்.
உன் பள்ளிப் பெயர் என்ன?
என் பள்ளிப் பெயர் ‘மோக்கா அரசாங்கப் பள்ளி’.
இது யார் பள்ளி?
இது என் பள்ளி.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: வகுப்பறை

**நோக்கம்:** 'வகுப்பறை' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்**: - வகுப்பறை

- வகுப்பறை படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பறையைச் சுட்டிக்காட்டி 'இது வகுப்பறை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் 'வகுப்பறை' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கும்படி செய்தல்.

ங. 'வகுப்பறை' என்ற சொல்லோடு 'என்', 'உன்' ஆகிய சொற்களை இணைத்துக் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொற்கள்**: கரும்பலகை / வெண்பலகை

**நோக்கம்:** 'கரும்பலகை, வெண்பலகை' என்ற சொற்களின் வேறுபாட்டை அறிதல்

**துணைக்கருவிகள்**: - கரும்பலகை (உண்மையான பொருள்)

- கரும்பலகை படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் கரும்பலகையைச் சுட்டிக்காட்டி, 'இது கரும்பலகை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. 'கரும்பலகை' என்ற சொல்லை மாணவர்கள் நன்கு உச்சரிக்கும்படி செய்தல்.

ங. ஒவ்வொரு மாணவனும் கரும்பலகையைச் சுட்டிக்காட்டி, 'இது கரும்பலகை' என்று சொல்லுதல்.

ச. 'கரும்பலகை' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**குறிப்பு**: 'கரும்பலகை' என்ற சொல்லைக் கற்பித்தவாறே, 'வெண்பலகை' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: சுண்ணாம்புக்கட்டி

**நோக்கம்:** 'சுண்ணாம்புக்கட்டி' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்**:
- சுண்ணாம்புக்கட்டி (உண்மையான பொருள்)
- சுண்ணாம்புக்கட்டி படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் சுண்ணாம்புக்கட்டியைச் சுட்டிக்காட்டி, 'இது சுண்ணாம்புக் கட்டி' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் எல்லாரும் 'சுண்ணாம்புக்கட்டி' என்ற சொல்லை நன்கு உச்சரித்தல்.

ங. ஒவ்வொரு மாணவனும் சுண்ணாம்புக்கட்டியைச் சுட்டிக்காட்டி, 'இது சுண்ணாம்புக்கட்டி' என்று சொல்லுதல்.

ச. சுண்ணாம்புக்கட்டி' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ரு. கீழ்க்காணும் 'சுண்ணாம்புக்கட்டி' பற்றிய பாடலைப் பாடச் செய்க.

**பாடல் ச**

சின்ன சின்ன கட்டி
சுண்ணாம்புக்கட்டி
எனக்கு ஒரு கட்டி
உனக்கு ஒரு கட்டி
சுண்ணாம்புக் கட்டி

**கற்பித்தல், கற்றல் சொல்:** நூல்

**நோக்கம்:** 'நூல்' என்ற சொல்லை அடையாளம் காணுதல்

**துணைக்கருவிகள்:** - தமிழ் நூல் (உண்மையான பொருள்)

- நூல் படம்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு நூலைச் சுட்டிக்காட்டி, 'இது நூல்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் எல்லாரும் தங்கள் நூலைச் சுட்டிக்காட்டி, 'இது நூல்' என்று சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும், 'இது என் நூல்' என்று சொல்ல வைத்தல்.

ச. 'இது தமிழ் நூல்' என்று ஒவ்வொரு மாணவனையும் சொல்லும்படி செய்தல்.

ரு. 'நூல்' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** படி

**நோக்கம்:** 'படி' என்ற கட்டளையைப் பின்பற்றுதல்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் படிக்கும்பொழுது, 'நான் படிக்கிறேன்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் எல்லாரையும் 'படி' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கச் செய்தல்.

ங. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் நூலில் படிக்கச் சொல்லி, 'நான் படிக்கிறேன் / நான் நூல் படிக்கிறேன்' என்று சொல்ல வைத்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** எழுது

**நோக்கம்:** 'எழுது' என்ற கட்டளையைப் பின்பற்றுதல்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் கரும்பலகையில்/ வெண்பலகையில் எழுதிக் கொண்டே 'நான் எழுதுகிறேன்' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் எல்லாரையும் 'எழுது' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கச் செய்தல்.

ங. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் கரும்பலகையில்/ வெண்பலகையில் எழுதச் சொல்லி, 'நான் எழுதுகிறேன்' என்று சொல்ல வைத்தல்.

ச. 'நான் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுகிறேன்' என்று ஒவ்வொரு மாணவனையும் செய்கையுடன் சொல்ல வைத்தல்.

ரு. 'எழுது' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** பெரிய

**நோக்கம்:** 'பெரிய' மற்றும் 'சிறிய' ஆகியவற்றின் வேறுபாட்டை அறிதல்

**துணைக்கருவிகள்**: - பெரிய மேசை / நாற்காலி - உள்ள படம்
- ஆசிரியர் மேசையும் நாற்காலியும்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பில் அறிமுகம் செய்த பெரிய பொருள்களைக் கொண்டு, 'பெரிய மேசை, பெரிய நாற்காலி, பெரிய பை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனும் பெரிய மேசையைத் தொட்டு, 'பெரிய மேசை' என்று சொல்லுதல்.

ங. ஆசிரியர் பெரிய மேசையைச் சுட்டிக்காட்டி, 'இது பெரிய மேசை' என்று பல முறை சொல்லுதல்.

ச. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் இவ்வாறே சொல்லவும் வைத்தல்.

ரு. ஆசிரியர் 'பெரிய' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** அது பெரிய பை.
பெரிய நாற்காலி காட்டு.
எது பெரிய மேசை?

**குறிப்பு**: 'பெரிய' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'சிறிய' என்ற சொல்லையும் கற்பித்தல். பிறகு ஆசிரியர் 'சிறிய /பெரிய' என்ற வேறுபாட்டைக் காட்டும்வகையில் வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: பெட்டி

**நோக்கம்:** 'பெட்டி' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்.

**துணைக்கருவிகள்**:
- பெட்டி (உண்மையான பொருள்)
- பெட்டி படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் நின்று பெட்டியைச் சுட்டிக்காட்டி, 'பெட்டி' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் 'பெட்டி' என்ற சொல்லை நன்கு உச்சரித்துச் செய்தல்.

ங. பெட்டி எடு, பெட்டி காட்டு, பெட்டி மேசைமேல் / கீழ் வை போன்ற ஏவல் தொடர்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. 'பெட்டி' என்ற சொல்லைக் கொண்டு எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது என்ன?
எது பெரிய பெட்டி?
பெட்டி எங்கே இருக்கிறது?
பெட்டியில் என்ன இருக்கிறது?

************

# தொகுதி ஐந்து

க.  வீடு

உ.  கதவு

ங.  திற

ச.  மூடு

ரு.  ரொட்டி

சூ.  சாப்பிடு

எ.  மிட்டாய்

அ.  சட்டை

கூ .  கால்சட்டை

க0.  காசு

கக.  கொடு

**திறன்கள்**: கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்**: வீடு

**நோக்கம்:** 'வீடு' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்**: - வீடு படம்

- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வீடு படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது வீடு' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் எல்லாரும் 'வீடு' என்ற சொல்லை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. ஆசிரியர் பெரிய வீடு படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது பெரிய வீடு' என்றும் சிறிய வீடு படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது சிறிய வீடு' என்றும் பல முறை சொல்லுதல்.

ச. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் இவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ரு. `ஆசிரியர் மின்னட்டைகளைக் கொண்டு உரையாடல் நடத்துதல்.

**(எ-கா)** இது வீடு.
இது என் வீடு.
இது என் பெரிய வீடு.
அது உன் சிறிய வீடு.

சு. கீழ்க்காணும் 'வீடு' பற்றிய பாடலைப் பாடச் செய்க.

## பாடல் ரு

சின்ன சின்ன வீடு

சிரித்து மகிழ வீடு
சிட்டுக் குருவி கூடு
வட்ட மிட்டு ஆடு

பட்டுச் சட்டைப் போட்டு
பாப்பா விளை யாடு

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: கதவு

**நோக்கம்**: 'கதவு' என்ற சொல்லை அறிந்துகொள்ளுதல்

**துணைக்கருவிகள்**:
- கதவு (உண்மையான பொருள்)
- கதவு படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பிலுள்ள கதவைத் தொட்டு, 'இது கதவு' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. கதவு படத்தைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது கதவு.
இது பெரிய / சிறிய கதவு.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: திற

**நோக்கம்**: 'திற' என்ற கட்டளையைப் பின்பற்றுதல்

**துணைக்கருவி**: ஒருவர் கதவைத் திறக்கும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பிலுள்ள கதவைத் திறக்கும்பொழுது 'நான் கதவு திறக்கிறேன்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் தன் தமிழ் நூலைத் திறக்கச் செய்து, 'நான் தமிழ் நூல் திறக்கிறேன்' என்று சொல்ல வைத்தல்.

ச. 'திற' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: மூடு

**நோக்கம்**: 'மூடு' என்ற கட்டளையைப் பின்பற்றுதல்

**துணைக்கருவி**: சிறுவன் பையை மூடும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் ஒரு பையை மூடும்பொழுது, 'நான் பை மூடுகிறேன்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் தன் தமிழ் நூலை மூடும்பொழுது, 'நான் தமிழ் நூல் மூடுகிறேன்' என்று சொல்ல வைத்தல்.

ச. 'மூடு' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி

நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: ரொட்டி

**நோக்கம்:** 'ரொட்டி' என்ற சொல்லை அறிமுகப்படுத்துதல்

**துணைக்கருவிகள்**: - ரொட்டி (உண்மையான பொருள்)

- ரொட்டி படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒரு ரொட்டியைச் சுட்டிக்காட்டி, 'இது ரொட்டி' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் எல்லாரும் 'ரொட்டி' என்ற சொல்லை நன்கு உச்சரித்தல்.

ந. 'ரொட்டி காட்டு', 'ரொட்டி எடு', 'ரொட்டி வை' போன்ற ஏவல் தொடர்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. 'ரொட்டி' என்ற சொல்லைக் கொண்டு எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** ரொட்டி மேசை மேல் வை
ரொட்டி பெட்டியில் வை
ரொட்டி பையில் வை

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: சாப்பிடு

**நோக்கம்:** 'சாப்பிடு' என்ற வினைச்சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவி**: ஒருவர் ரொட்டி சாப்பிடும் படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் ஒரு துண்டு ரொட்டியைச் சாப்பிடும்பொழுது 'நான் ரொட்டி சாப்பிடுகிறேன்' என்று பல முறை உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'சாப்பிடு' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: மிட்டாய்

**நோக்கம்**: 'மிட்டாய்' என்ற சொல்லை அறிந்துகொள்ளுதல்

**துணைக்கருவிகள்**: - மிட்டாய் (உண்மையான பொருள்)
- மிட்டாய் வகைகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்பில் மிட்டாய் வகைகளைச் சுட்டிக்காட்டி, 'இது மிட்டாய்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. மாணவர்கள் எல்லாரையும் 'மிட்டாய்' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கச் செய்தல்.

ங. ஒவ்வொரு மாணவனும் 'இது மிட்டாய்' என்று சொல்லுதல்.

ச. 'மிட்டாய் சாப்பிடு', 'மிட்டாய் எடு', 'மிட்டாய் மேசை மேல் / பையில் / பெட்டியில் வை' போன்ற ஏவல் தொடர்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: சட்டை

**நோக்கம்:** 'சட்டை' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:**
- சட்டை (உண்மையான பொருள்)
- சட்டை படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் மாணவனுடைய சட்டையைச் சுட்டிக்காட்டி, 'இது சட்டை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனும் 'சட்டை' என்ற சொல்லை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. 'சட்டை காட்டு', 'சட்டை எடு' போன்ற ஏவல்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது என் சட்டை.
அது உன் சட்டை.
இது பெரிய சட்டை.
அது சிறிய சட்டை.

ரு. 'சட்டை' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** கால்சட்டை

**நோக்கம்:** 'கால்சட்டை' என்ற சொல்லை அறிதல்

**துணைக்கருவிகள்:**
- கால்சட்டை (உண்மையான பொருள்)
- கால்சட்டை படம் (குட்டையான / நீளமான

கால்சட்டை)

- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் மாணவனுடைய கால்சட்டையைச் சுட்டிக்காட்டி, 'இது கால்சட்டை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனும் 'கால்சட்டை' என்ற சொல்லை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. 'கால்சட்டை காட்டு' , 'கால்சட்டை தொடு' போன்ற ஏவல்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. மின்னட்டைகளைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது என் கால்சட்டை.
அது உன் கால்சட்டை.
அது அப்பா கால்சட்டை.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: காசு

**நோக்கம்:** 'காசு' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்**: - பலவகையான காசுகள் (உண்மையான பொருள்கள்)

- காசு படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் வகுப்புக்கு முன்னால் ஒரு காசைச் சுட்டிகாட்டி, 'இது காசு' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் செய்தல்.

ங. 'காசு எடு', 'காசு மேசை மேல் வை', 'காசு பையில் வை ' போன்ற ஏவல்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. 'காசு' என்ற சொல்லோடு 'இது', 'அது' போன்ற சொற்களை இணைத்து வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்**: கொடு

**நோக்கம்:** 'கொடு' என்ற கட்டளையைப் பின்பற்றுதல்

**துணைக்கருவி**: பொருத்தமான படம்

**நடவடிக்கைகள்**:

க. ஆசிரியர் மேசைமேல் மிட்டாய், பழம், காசு, நூல், ரொட்டி முதலியவற்றை வைத்து, பிறகு ஒரு மாணவனுக்கு மிட்டாயைக் கொடுத்து 'நான் மிட்டாய் கொடுக்கிறேன்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஆசிரியர் 'கொடு' என்ற சொல்லை நன்கு உச்சரித்தல்.

ங. ஆசிரியர் ஒரு மாணவனைப் பார்த்து, 'பை கொடு' என்ற ஏவலைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. இவ்வாறே 'ரொட்டி/ நூல்/ சுண்ணாம்புக்கட்டி/ குவளை முதலிய பொருள்களைக் கொண்டு எளிய வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** நான் ரொட்டி கொடுக்கிறேன்.

************

# தொகுதி ஆறு

க. வெள்ளை நிறம்

உ. கருப்பு நிறம்

ரு. சிவப்பு நிறம்

ச. நீல நிறம்

ரு. மஞ்சள் நிறம்

சூ. பச்சை நிறம்

எ. வாழைப் பழம்

அ. மாம்பழம்

கூ . ஆப்பிள் பழம்

க0. ஆரஞ்சுப் பழம்

கக. திராட்சைப் பழம்

**கற்பித்தல், கற்றல் சொல்:** வெள்ளை நிறம்

**நோக்கம்:** நிறங்களை அறிமுகப்படுத்துதல்

**துணைக்கருவிகள்:**
- வெள்ளை சுண்ணாம்புக்கட்டி (உண்மையான பொருள்)
- பால் (உண்மையான பொருள்)
- பொருத்தமான கருவிகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் சுண்ணாம்புக்கட்டியைச் சுட்டிக்காட்டி, 'இது சுண்ணாம்புக்கட்டி' என்றும் 'சுண்ணாம்புக்கட்டி வெள்ளை நிறம்' என்றும் பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் 'சுண்ணாம்புக்கட்டி வெள்ளை நிறம்' என்று சொல்ல வைத்தல்.

ங. ஆசிரியர் ஒரு கண்ணாடிக் குவளையில் இருக்கின்ற பாலைச் சுட்டிக்காட்டி, 'பால் என்ன நிறம்?' என்று வினவி, ஒவ்வொருவரையும் 'பால் வெள்ளை நிறம்' என்று சொல்ல வைத்தல்.

ச. வெள்ளை நிறம் என்பதைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**குறிப்பு:** ஆசிரியர் கருப்பு நிறம், சிவப்பு நிறம், நீல நிறம், மஞ்சள் நிறம், பச்சை நிறம் என்பனவற்றையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல்,கற்றல் சொல்:** வாழைப் பழம்

**நோக்கம்:** பழ வகைகளைப் பற்றி அறிதல்

**துணைக்கருவிகள்:**
- பலவகைப் பழங்கள் (உண்மையான பொருள்கள்)
- வாழைப் பழம் படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் பழ வகைகளுள் ஒன்றைச் சுட்டிக்காட்டி, 'இது பழம்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் இவ்வாறே வெவ்வேறு பழத்தைச் சுட்டிக்காட்டி, 'இது பழம்' என்று நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ச. ஆசிரியர் ஒரு வாழைப் பழத்தைச் சுட்டிக்காட்டி, 'இது வாழைப் பழம்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ரு. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

சு. ஆசிரியர் 'வாழைப் பழம்' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது எந்தப் பழம்?
இது வாழைப் பழம்.
வாழைப் பழம் என்ன நிறம்?
வாழைப் பழம் மஞ்சள் நிறம்.
வாழைப் பழம் இனிக்கும்.

எ. 'வாழைப் பழம் எடு/ வாழைப் பழம் வை/ வாழைப் பழம் சாப்பிடு' போன்ற ஏவல்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

அ. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு கற்பித்தல் நடத்துதல்.

**குறிப்பு:** ஆசிரியர் இவ்வாறே மாம்பழம், ஆப்பிள் பழம், ஆரஞ்சுப் பழம், திராட்சைப் பழம் முதலியவற்றைக் கற்பித்தல்.

**பாடல் சூ**

கை வீசம்மா கை வீசு
கடைக்குப் போகலாம் கை வீசு
ஆப்பிள் வாங்கலாம் கை வீசு
ஆரஞ்சு தின்னலாம் கை வீசு
வாழை எடுக்கலாம் கை வீசு
வானம் பார்க்கலாம் கை வீசு

# தொகுதி ஏழு

க. பூ

உ. ரோசாப் பூ

ங. தாமரைப் பூ

ச. மரம்

ரு. வாழை மரம்

சூ . மாமரம்

எ. இலை

அ. தொடு

**திறன்கள்:** கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்:** பூ

**நோக்கம்:** 'பூ' என்ற சொல்லை அடையாளம் காணுதல்

**துணைக்கருவிகள்:** - பூக்கள் (உண்மையான பொருள்கள்)
- பூ படம்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஏதேனும் ஒரு பூவைச் சுட்டிக்காட்டி, 'இது பூ' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. ஆசிரியர் 'பூ' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** பூ என்ன நிறம்?
பூ எடு / பூ மேசைமேல் வை.
இது அழகான பூ.

ரு. கீழ்க்காணும் 'பூ' பற்றிய பாடலைப் பாடச் செய்க.

## பாடல் எ

கைக் கொட்டம்மா கை கொட்டு
கண்ணே மணியே கை கொட்டு
தலை யாட்டம்மா தலை ஆட்டு
தாமரைப் பூவே தலை ஆட்டு

பூ எடுத்து ஆடுவோம்
பூப் பாட்டு பாடுவோம்
இங்கே பூ பாராய்
அங்கே பூ காணாய்
எங்கும் பூ வாராய்
(கைக் கொட்டம்மா.....)

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** ரோசாப் பூ

**நோக்கம்:** 'ரோசாப் பூ' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:**
- ரோசாப் பூக்கள் (உண்மையான பொருள்கள்)
- ரோசாப் பூ படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு ரோசாப் பூவைச் சுட்டிக்காட்டி, 'இது ரோசாப் பூ' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. ரோசாப் பூ பல்வேறு நிறங்களில் உள்ளது என்று ஆசிரியர் சுட்டிக்காட்டி வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**குறிப்பு:** ஆசிரியர் இவ்வாறே 'தாமரைப் பூ' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** மரம்

**நோக்கம்:** 'மரம்' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:**
- ஒரு மரம் (பள்ளித் திடலில் உள்ள மரத்தைக் காட்டுதல்)
- மரம் படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு மரத்தைச் சுட்டிக்காட்டி, 'இது மரம்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. 'மரம்' என்ற சொல்லோடு 'சிறிய / பெரிய' போன்ற சொற்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** வாழை மரம்

**நோக்கம்:** 'வாழை மரம்' மற்றும் 'மாமரம்' ஆகிய மர வகைகளைப் பற்றி அறிதல்

**துணைக்கருவிகள்:**
- வாழை மரம் படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் வாழை மரத்தைச் சுட்டிக்காட்டி, 'இது வாழை மரம்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது எந்த மரம்?
இது வாழை மரம்.
இது பெரிய / சிறிய வாழை மரம்.

**குறிப்பு:** ஆசிரியர் இவ்வாறே மாமரத்தைக் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** இலை

**நோக்கம்:** 'இலை' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:**
- இலை (உண்மையான பொருள்)
- இலை படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஓர் இலையைச் சுட்டிக்காட்டி, 'இது இலை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'இலை' என்ற சொல்லைக் கொண்டு எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இலை எடு.

இலை மேசைமேல் வை.

இலை என்ன நிறம்?

இலை பச்சை நிறம்.

இது வாழை இலை.

இது பெரிய இலை.

ச. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** தொடு

**நோக்கம்:** 'தொடு' என்ற கட்டளையைப் பின்பற்றுதல்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு மேசையைத் தொட்டு, 'நான் மேசை தொடுகிறேன்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. `ஆசிரியர் ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'தொடு' என்ற வினையைக் கொண்டு மற்ற பொருள்களோடு இணைத்துக் கற்பித்தல்.

**(எ-கா)** மேசை தொடு.

நாற்காலி தொடு

அலமாரி தொடு.............

ச. இவ்வாறே 'தொடு' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

# தொகுதி எட்டு

க. ஒன்று

உ. இரண்டு

ங. மூன்று

ச. நான்கு

ரு. ஐந்து

சா. பறவை

எ. கோழி

அ. புறா

கூ. விலங்கு

க0. நாய்

கக. பூனை

கஉ. பசு

**திறன்கள்:** கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்:** ஒன்று

**நோக்கம்:** எண்ணை அடையாளம் கண்டு வரிசைப்படுத்திக் கூறுதல்

**துணைக்கருவிகள்:**
- மேசை (உண்மையான பொருள்)
- மேசை படம் பக்கத்தில் எண் 'ஒன்று' (க, 1).
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு மேசையைச் சுட்டிக்காட்டி, 'ஒரு மேசை', என்று சொல்லி, சுட்டு விரலைக் காட்டி, 'ஒன்று' என்று சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ந. ஆசிரியர் ஒரு மேசைப் படத்தைக் காட்டி, அதே படத்தில் எண் ஒன்று (க, 1) என்பதையும் சுட்டிக்காட்டி, 'ஒன்று' என்று சொல்லுதல்.

ச. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ரு. மேசை என்ற சொல்லுக்குப் பதிலாகப் பிற பொருள்களையும் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

சு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** இரண்டு

**துணைக்கருவிகள்:**
- இரண்டு மேசைகள் (உண்மையான பொருள்கள்)
- இரண்டு மேசைகள் கொண்ட படத்தில்

எண் 'இரண்டு, (உ)

- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் இரண்டு மேசைகளைச் சுட்டிக்காட்டி, 'இரண்டு மேசைகள்' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. ஆசிரியர் இரண்டு மேசைகள் கொண்ட படத்தைக் காட்டி, அதே படத்தில் எண் 'இரண்டு' (உ)என்பதையும் சுட்டிக்காட்டி, 'இரண்டு' என்று பல முறை சொல்லுதல்.

ச. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ரு. ஆசிரியர் தம் கைவிரல்களை எண்ணிக் கொண்டே 'ஒன்று', 'இரண்டு' என்று பல முறை செய்கையுடன் சொன்ன பிறகு ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

சூ. 'இரண்டு' என்ற எண்ணை மற்ற பொருள்களோடு இணைத்துக் கற்பித்தல்.

எ. 'எத்தனை' என்ற வினாப் பெயரைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

அ. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

குறிப்பு: 'இரண்டு' என்ற எண்ணைக் கற்பித்தவாறே 'மூன்று' முதல் 'ஐந்து' வரையிலான எண்களையும் கற்பிக்கலாம்.

**கற்பித்தல், கற்றல் சொல்:** பறவை

**நோக்கம்:** 'பறவை' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:** - பறவை படம்

- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஏதேனும் ஒரு பறவை படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது பறவை' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. ஆசிரியர் ஒரு பறவை பறக்கும் படத்தைச் சுட்டிக்காட்டி, 'பறவை பறக்கிறது' என்று பல முறை சொன்ன பிறகு, ஒவ்வொரு மாணவனையும் செய்கையுடன் அவ்வாறே சொல்ல வைத்தல்.

ச. ஆசிரியர் பறவை பறக்கும் படத்தைச் சுட்டிக்காட்டி, 'பறவை என்ன செய்கிறது?' என்று வினவி, மாணவர்கள் எல்லாரிடமும் 'பறவை பறக்கிறது' என்ற விடையை வரவழைத்தல்.

ரு. ஆசிரியர் மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது பறவை.
பறவை பறக்கிறது.
பறவை பழம் தின்னும்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** கோழி

**நோக்கம்:** 'கோழி மற்றும் புறா' ஆகிய பறவைகள அறிமுகப்படுத்துதல்.

**துணைக்கருவிகள்:** - கோழி படம்

- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு கோழியின் படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது கோழி' என்று பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. ஆசிரியர் கோழியின் படத்தைச் சுட்டிக்காட்டி, மாணவர்கள் எல்லாரையும் பார்த்து, 'கோழி ஒரு பறவை' என்று சொல்லுதல்.

ச. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ரு. ஆசிரியர் மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது கோழி.
இது பெரிய கோழி.
கோழி முட்டை இடும்.
கோழி ரொட்டி தின்னும்.
கோழி பறக்கிறது.

**குறிப்பு:** ஆசிரியர் 'கோழி' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'புறா' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** விலங்கு

**நோக்கம்:** 'விலங்கு' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:** - சில விலங்குகளின் படங்கள்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு விலங்கின் படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது விலங்கு' என்று பல முறை சொன்ன பிறகு, ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

உ. ஆசிரியர் விலங்கு படம் ஒவ்வொன்றையும் சுட்டிக்காட்டி, 'இது என்ன?' என்று வினவி, 'இது விலங்கு' என்று எல்லாரையும் விடை அளிக்கச் செய்தல்.

ங. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ச. ஆசிரியர் 'விலங்கு' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** நாய்

**நோக்கம்:** 'நாய்', 'பூனை', 'பசு' ஆகிய விலங்குகளைப் பற்றி அறிந்துகொள்ளுதல்

**துணைக்கருவிகள்:**
- நாய் படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் நாயின் படத்தைச் சுட்டிக்காட்டி, 'இது நாய்' என்று பல முறை சொன்ன பிறகு, ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

உ. ஆசிரியர் நாயின் படத்தைச் சுட்டிக்காட்டி, 'நாய் ஒரு விலங்கு' என்று சொல்லுதல்.

ட. ஆசிரியர் நாயின் படத்தைச் சுட்டிக்காட்டி எளிமையான வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது என்ன?

நாய் என்ன நிறம்?

நாய்க்கு எத்தனை கால்கள் உண்டு?

நாய் என்ன தின்னும்?

ச. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**குறிப்பு:** ஆசிரியர் 'நாய்' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'பூனை மற்றும் பசு' ஆகிய சொற்களையும் கற்பித்தல்.

## பாடல் அ

வெள்ளைப் பூனை போகுது
மெல்ல மெல்லப் போகுது
மியாவ்!
பழுப்புப் பூனை போகுது
பக்கம் பார்த்துப் போகுது
கருப்புப் பூனை போகுது
கள்ளன் போலப் போகுது!

பூனை மூன்று கூடியே
போவது எங்கே தெரியுமா?
பானை உருட்டும் எலிகளைப்
பாய்ந்து பிடித்துத் தின்னவே!

வெள்ளைப் பூனை போகுது
மெல்ல மெல்லப் போகுது
மியாவ்!

# தொகுதி ஒன்பது

க. உடல்

உ. தலை

ங. தலைமுடி

ச. நெற்றி

ரு. கண்

சூ. காது

எ. மூக்கு

அ. வாய்

கூ . பல்

க0. நாக்கு

கக. முகம்

கஉ. கழுத்து

கங. மார்பு

கச. வயிறு

கரு. இடுப்பு

கசூ. முதுகு

கஎ. கை

கஅ. கால்

ககூ . விரல்

உ0. நகம்

**திறன்கள்:** கேட்டல், பேசுதல்

**கற்பித்தல், கற்றல் சொல்:** உடல்

**நோக்கம்:** 'உடல்' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:** - உடல் (உண்மையான பொருள்)
- உடலைக் காட்டும் படம்

**நடவடிக்கைகள்:**

க. 'உடல்' படத்தின் மூலமாக உடலை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் உடலைச் சுட்டிக்காட்டி, 'இது உடல்' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. மாணவர்கள் எல்லாரும் 'உடல்' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கும்படி செய்தல்.

ச. ஒவ்வொரு மாணவனும் தன் உடலைச் சுட்டிக்காட்டி, 'இது உடல்', 'இது என் உடல்' என்று சொல்லுதல்.

ரு. 'காட்டு' என்ற ஏவல் வினையைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** உன் உடலைக் காட்டு.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** தலை

**நோக்கம்:** 'தலை' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:** - தலை (உண்மையான பொருள்)
- தலை படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. 'தலை' படத்தின் மூலமாக தலையை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் தலையைச் சுட்டிக்காட்டி, 'இது தலை, இது என் தலை' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. மாணவர்கள் எல்லாரையும் 'தலை' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கும்படி செய்தல்.

ச. ஒவ்வொரு மாணவனும் தன் தலையைச் சுட்டிக்காட்டி, 'இது என் தலை' என்று சொல்லுதல்.

ரு. 'தலை' என்ற சொல்லோடு 'அசை, குனி, நிமிர்' போன்ற ஏவல்களை இணைத்து வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** தலை நிமிர்.

சு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

எ. 'தலை' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** தலைமுடி

**நோக்கம்:** 'தலைமுடி' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:** தலைமுடி (உண்மையான பொருள்)

'தலைமுடி' படம்

**நடவடிக்கைகள்:**

க. 'தலைமுடி' படத்தின் மூலமாக, தலைமுடியை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் தலைமுடியைச் சுட்டிக்காட்டி, 'இது தலைமுடி' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. மாணவர்கள் எல்லாரையும் 'தலைமுடி' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கும்படி செய்தல்.

ச. ஒவ்வொரு மாணவனும் தன் தலைமுடியைச் சுட்டிக்காட்டி, 'இது என் தலைமுடி' என்று சொல்லுதல்.

ரு. 'தலைமுடி' என்ற சொல்லோடு 'காட்டு, தொடு, கருப்பு நிறம்' முதலியவற்றை இணைத்து வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** நெற்றி

**நோக்கம்:** 'நெற்றி' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:** நெற்றி (உண்மையான பொருள்)

'நெற்றி ' படம்

**நடவடிக்கைகள்:**

க. 'நெற்றி' படத்தின் மூலமாக நெற்றியை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் நெற்றியைச் சுட்டிக்காட்டி, 'இது என் நெற்றி' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ந. மாணவர்கள் எல்லாரையும் 'நெற்றி' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கும்படி செய்தல்.

ச. ஒவ்வொரு மாணவனும் தன் நெற்றியைச் சுட்டிக்காட்டி, 'இது என் நெற்றி' என்று சொல்லுதல்.

ரு. 'நெற்றி' என்ற சொல்லோடு 'காட்டு, தொடு' ஆகிய ஏவல் வினைகளைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.
**(எ-கா)** நெற்றி காட்டு.

சூ. 'நெற்றி' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** கண்

**நோக்கம்:** 'கண்' மற்றும் 'காது' ஆகிய உடல் உறுப்புக்களை அறிந்து கொள்ளுதல்

**துணைக்கருவிகள்:**
- கண் (உண்மையான பொருள்)
- கண் படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. 'கண்' படத்தின் மூலமாக, கண்ணை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் கண்ணைச் சுட்டிக்காட்டி, 'இது கண்' என்றும் 'இது என் கண்' என்றும் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. 'கண்' என்ற சொல்லை நன்கு உச்சரிக்கும்படி செய்தல்.

ச. ஒவ்வொரு மாணவனும் தன் கண்ணைச் சுட்டிக்காட்டி, 'இது என் கண்' என்று சொல்லுதல்.

ரு. 'கண்' என்ற சொல்லோடு 'மூடு, திற, காட்டு, பார், தொடு' ஆகிய வினைகளை இணைத்து வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

சூ. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

எ. ஆசிரியர் தம் இரு கண்களைச் சுட்டிக்காட்டி, 'இவை கண்கள்' என்று பல முறை சொல்லுதல்.

அ. 'இது கண், இவை கண்கள்' ஆகிய தொடர்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**குறிப்பு:** 'கண்' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'காது' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** மூக்கு

**நோக்கம்:** 'மூக்கு' என்ற சொல்லை அறிதல்

**துணைக்கருவிகள்:** - மூக்கு (உண்மையான பொருள்)
- மூக்கு படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. 'மூக்கு' படத்தின் மூலமாக மூக்கை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் மூக்கைச் சுட்டிக்காட்டி, 'இது மூக்கு' என்றும் 'இது என் மூக்கு' என்றும் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ச. 'மூக்கு' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ரு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** வாய்

**நோக்கம்:** 'வாய்' என்ற உடல் உறுப்பை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:** - வாய் (உண்மையான பொருள்)
- வாய் படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. 'வாய்' படத்தின் மூலமாக வாயைச் அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் வாயைச் சுட்டிக்காட்டி, 'இது வாய்' என்றும் 'இது என் வாய்' என்றும் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ச. 'வாய்' என்ற சொல்லோடு 'காட்டு, தொடு, திற, மூடு' என்ற ஏவல் வினைகளை இணைத்து கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ரு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** பல்

**நோக்கம்:** 'பல்' என்ற சொல்லை அறிந்துகொள்ளுதல்

**துணைக்கருவிகள்:**
- பல் (உண்மையான பொருள்)
- பல் படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. 'பல்' படத்தின் மூலமாக பல்லை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் பல்லைச் சுட்டிக்காட்டி, 'இது பல்' என்றும் 'இது என் பல்' என்றும் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ச. 'பல்' என்ற சொல்லோடு 'காட்டு, தொடு, பார், வெள்ளை நிறம்' ஆகியவற்றை இணைத்து வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ரு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** நாக்கு

**நோக்கம்:** 'நாக்கு', 'முகம்', கழுத்து', 'தோள்' ஆகிய உடல் உறுப்புக்களை அறிமுகப்படுத்துதல்

**துணைக்கருவிகள்:**
- நாக்கு (உண்மையான பொருள்)
- நாக்கு படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. 'நாக்கு' படத்தின் மூலமாக நாக்கை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் நாக்கைச் சுட்டிக்காட்டி, 'இது நாக்கு' என்றும் 'இது என் நாக்கு' என்றும் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ச. 'நாக்கு' என்ற சொல்லோடு 'காட்டு, தொடு, பார்' முதலிய ஏவல் வினைகளைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ரு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**குறிப்பு:** 'நாக்கு' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'முகம், கழுத்து, தோள்' ஆகிய சொற்களையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** மார்பு

**நோக்கம்:** 'மார்பு', 'வயிறு', 'இடுப்பு', 'முதுகு' ஆகிய உடல் உறுப்புக்களை அறிந்துகொள்ளுதல்

**துணைக்கருவி:** உடல் உறுப்புக்கள் காட்டும் படம்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் முன் கற்பித்த தலை, கண் முதலிய உறுப்புக்களைக் குறித்து முன்னறிவைச் சோதித்தல்.

உ. ஆசிரியர் தம் மார்பைச் சுட்டிக்காட்டி 'இது மார்பு' என்றும் 'இது என் மார்பு' என்றும் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. மாணவர்கள் எல்லாரையும் இவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ச. ஆசிரியர் ஒரு மாணவனைப் பார்த்து, 'உன் மார்பு காட்டு' என்று கட்டளை இட்டு, மாணவன் 'இது என் மார்பு' என்று சொல்லுதல்.

**குறிப்பு:** வயிறு, இடுப்பு, முதுகு முதலிய உடல் உறுப்புக்களை இவ்வாறே கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** கை

**நோக்கம்:** 'கை' மற்றும் 'கால்' ஆகிய உடல் உறுப்புக்களை அறிதல்

**துணைக்கருவிகள்:**
- கை (உண்மையான பொருள்)
- கை படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. 'கை' படத்தின் மூலமாக கையை அறிமுகம் செய்தல்.

உ. ஆசிரியர் தம் கையைச் சுட்டிக்காட்டி, 'இது கை' என்றும் 'இது என் கை' என்றும் பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ச. 'கை' என்ற சொல்லோடு 'காட்டு, தொடு, அசை, தூக்கு' முதலிய ஏவல் வினைகளைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

ரு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

சு. 'கை', 'கைகள்' என்ற இரு சொற்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**குறிப்பு:** 'கை' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'கால்' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** விரல்

**நோக்கம்:** 'விரல்' என்ற சொல்லை அறிதல்

**துணைக்கருவிகள்:**
- விரல் (உண்மையான பொருள்)
- விரல் படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் மாணவர்களுக்குத் தெரிந்த உடல் உறுப்புக்களைக் கொண்டு முன்னறிவைச் சோதித்தல்.

உ. ஆசிரியர் தம் விரலைச் சுட்டிக்காட்டி, 'இது விரல்' என்றும் 'இது என் விரல்' என்றும் பல முறை சொல்லுதல்.

ங. மாணவர்கள் எல்லாரையும் 'விரல்' என்ற சொல்லை நன்கு உச்சரித்துச் சொல்ல வைத்தல்.

ச. ஒவ்வொரு மாணவனும் தன் விரலைச் சுட்டிக்காட்டி, 'இது என் விரல்' என்று சொல்லுதல்.

ரு. 'விரல்' மற்றும் 'விரல்கள்' ஆகிய சொற்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**குறிப்பு:** 'விரல்' என்ற சொல்லைக் கற்பித்தவாறே 'நகம்' என்ற சொல்லையும் கற்பித்தல்.

************

## பாடல் கூ

முடியும் முகமும் ஒன்று!
மூக்கும் நாக்கும் ஒன்று!
பார்க்கும் கண்கள் இரண்டு!
பற்கள் பலவே இருக்கு!
வயிறும் வாயும் ஒன்று!
வளையா முதுகும் ஒன்று!
கையும் காலும் இரண்டு!
கேட்கும் காதும் இரண்டு!
கழுத்தும் இடுப்பும் ஒன்றே!
கண்டு கொள்ளலாம் நன்றே!

# தொகுதி பத்து

க. ஆறு

உ. ஏழு

ங. எட்டு

ச. ஒன்பது

ரு. பத்து

சு. தொப்பி

**கற்பித்தல், கற்றல் சொல்:** ஆறு

**நோக்கம்:** ஆறு முதல் ஒன்பது வரை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:**
- ஆறு பைகள் (உண்மையான பொருள்கள்)
- ஆறு பைகள் கொண்ட படத்தில் எண் 'ஆறு' (சு, 6)
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் ஒரு பையைச் சுட்டிக்காட்டி, 'ஒரு பை' என்றும் ஆறு பைகளைச் சுட்டிக்காட்டி, 'ஆறு பைகள்' என்றும் பல முறை சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. ஆசிரியர் ஆறு பைகள் கொண்ட படத்தைக் காட்டி, அதே படத்தில் எண் 'ஆறு' என்பதையும் சுட்டிக்காட்டி, 'ஆறு' என்று பல முறை சொல்லுதல்.

ச. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ரு. ஆசிரியர் தம் கைவிரல்களை எண்ணிக் கொண்டே 'ஒன்று' முதல் 'ஆறு' வரை என்று பல முறை செய்கையுடன் சொன்ன பிறகு ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

சு. 'ஆறு' என்ற எண்ணை மற்ற பொருள்களோடு இணைத்துக் கற்பித்தல்.

எ. 'எத்தனை' என்ற வினாப் பெயரைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

அ. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

குறிப்பு: 'ஆறு' என்ற எண்ணைக் கற்பித்தவாறே ஏழு முதல் ஒன்பது வரை கற்பிக்கலாம்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** பத்து

**நோக்கம்:** பத்து என்ற எண்ணை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:**
- பத்து நூல்கள் (உண்மையான பொருள்கள்)
- எண் பத்து (10, க0) படம்
- பத்து காசு, பத்து ரூபாய் நாணயங்கள்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் 'ஒன்று', 'இரண்டு' ஆகிய எண்களைக் குறித்து முன்னறிவைச் சோதித்தல்.

உ. பத்து பூக்கள் அல்லது மிட்டாய்கள் முதலிய பொருள்களை எண்ணிக் காட்டி, 'பத்து' என்று பல முறை சொல்லுதல்.

ங. ஒவ்வொரு மாணவனையும் கைவிரல்களில் ஒன்று முதல் பத்து வரை எண்ணச் செய்தல்.

ச. எவையேனும் பத்துப் பொருள்களின் பக்கத்தில் 'பத்து' என்ற எண் அமைந்த படத்தைச் சுட்டிக்காட்டி, பத்து என்று கற்பித்தல்.

ரு. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

சு. 'எத்தனை' என்ற வினாப் பெயரைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

**கற்பித்தல், கற்றல் சொல்:** தொப்பி

**நோக்கம்:** 'தொப்பி' என்ற சொல்லை அறிமுகம் செய்தல்

**துணைக்கருவிகள்:**
- தொப்பி (உண்மையான பொருள்)
- தொப்பி படம்
- மின்னட்டைகள்

**நடவடிக்கைகள்:**

க. ஆசிரியர் தொப்பியைச் சுட்டிக்காட்டி, 'இது தொப்பி' என்று பல முறை நன்கு உச்சரித்துச் சொல்லுதல்.

உ. ஒவ்வொரு மாணவனையும் அவ்வாறே செய்யவும் சொல்லவும் வைத்தல்.

ங. 'தொப்பி' என்ற சொல்லைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** அது தொப்பி.
அது உன் தொப்பி.
என் தொப்பி நீல நிறம்.
தொப்பி தலையில் இருக்கிறது.

ச. மின்னட்டை முதலியவற்றைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

**(எ-கா)** இது சிறிய தொப்பி.
அது பெரிய தொப்பி.

ரு. 'தொப்பி தலையில் போடு', 'தொப்பி எடு', 'தொப்பி மேசைமேல் வை' ஆகிய ஏவல்களைக் கொண்டு வாய்மொழிப் பயிற்சி நடத்துதல்.

************

## பாடல் க0

ஒன்று இரண்டு மூன்று
ஓடி வந்தது கன்று
நான்கு ஐந்து ஆறு
நன்றாய் அதைப் பாரு
ஏழு எட்டு ஒன்பது
எங்கும் நுழைந்து தின்றது
சிறுவர் அங்கே பத்து
சிரித்தார் கன்றைப் பார்த்து.

# சொல் பட்டியல் – முதல் வகுப்பு

## LIST OF WORDS - STANDARD I

1. அப்பா
2. அம்மா
3. அலமாரி
4. ஆசிரியர்/ஐயா
5. ஆசிரியை
6. ஆப்பிள் பழம்
7. ஆரஞ்சுப் பழம்
8. ஆறு
9. இடுப்பு
10. இரண்டு
11. இலை
12. இவர்
13. இவள்
14. இவன்
15. உட்கார்
16. உடல்
17. உத்தரவு கொடு
18. உன்
19. எட்டு
20. எடு
21. எழுது
22. எழுதுகோல்
23. என்
24. ஏழு
25. ஐந்து
26. ஒன்பது
27. ஒன்று
28. கண்
29. கதவு
30. கருப்பு நிறம்
31. கரும்பலகை
32. கழுத்து
33. காசு
34. காது
35. கால்
36. கால்சட்டை
37. கீழ்
38. குடி
39. குவளை
40. கை

41. கொடு
42. கோழி
43. சட்டை
44. சாப்பிடு
45. சிவப்பு நிறம்
46. சிறிய
47. சிறுமி
48. சிறுவன்
49. சுண்ணாம்புக்கட்டி
50. தண்ணீர்
51. தலை
52. தலைமுடி
53. தாமரைப் பூ
54. திராட்சைப் பழம்
55. திற
56. தொடு
57. தொப்பி
58. நகம்
59. நன்றி
60. நாக்கு
61. நாய்
63. நான்
64. நான்கு
65. நில்
66. நீ
67. நீல நிறம்
68. நூல்
69. நெற்றி
70. பச்சை நிறம்
71. பசு
72. படி
73. பத்து
74. பந்து
75. பல்
76. பழம்
77. பள்ளி
78. பறவை
79. பால்
80. புறா
81. பூ
82. பூனை
83. பெட்டி

62. நாற்காலி

84. பெயர்

85. பெரிய

86. பை

87. போ

88. மஞ்சள் நிறம்

89. மரம்

90. மாம்பழம்

91. மாமரம்

92. மார்பு

93. மிட்டாய்

94. முகம்

95. முதுகு

96. மூக்கு

97. மூடு

98. மூன்று

99. மேசை

100. மேல்

101. ரொட்டி

102. ரோசாப் பூ

103. வகுப்பறை

104. வணக்கம்

105. வயிறு

107. வாய்

108. வாழைப் பழம்

109. வாழை மரம்

110. விரல்

111. விலங்கு

112. வீடு

113. வெண்பலகை

114. வெள்ளை நிறம்

115. வை

106. வா